மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தற்போது என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திருச்சி மலைக்கோட்டைக்கு '' இழுவை இரயில் '' அமைக்கும் திட்டம்.

*வினா எண் 710—திரு. வேடச்சந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன், திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மலைக்கோட்டைக்கு விஞ்ச் (Winch) அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைக்கோட்டையில் இருக்கிற உச்சி பிள்ளையார் கோவிலுக்கு அதிகமான அளவில் பக்தர்கள் தினசரி செல்கிறார்கள். அடுத்த ஆண்டிலாவது பழனியில் இருப்பதைப் போன்று இழுவை இரயில் அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு இழுவை இரயில் அமைப்பதை முன்பே பரிசீலிக்கப்பட்டு 9.60 இலட்சம் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டது. அதற்கு தொழில் நுட்ப ரீதியில் அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று சொல்லப்பட்டது. உச்சி பிள்ளையார் இருக்கிற குன்று பகுதி அதிக உயரமில்லாத காரணத்தால் நடந்து சென்று வருவது நல்லது என்று பக்தர்கள் அபிப்பிராயப்பட்டதால் அது கைவிடப்பட்டது.

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயத்திலுள்ள '' இரட்டைத் திருமாளிகை''.

*வினா எண். 711—திரு. க. பாரமலை : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரம் நகரிலுள்ள அருள்மிகு ஏகாம்பரநாதர் கோவிலில் '' இரட்டை திருமாளிகை '' எனப்படும் பகுதி முள் புதர்கள் வளர்ந்து பக்தர்கள் போக முடியாத அளவிற்கு

சீர்கெட்டுப்போயிருப்பது பற்றி அரசுக்குத் தகவல் எதுவும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அப்பகுதியை சீரமைப்பதற்கு அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ). ஆண்டு தோறும் இரட்டைத் திருமாளிகையின் எதிரில் வளரும் செடி, கொடிகள் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், திருமாளிகையைச் செப்பனிடவும், ஆலயத்தில் இதர திருப்பணிகளைச் செய்யவும், திருப்பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரட்டை திருமாளிகைக்குச் சொந்தமான நிலங்களை, கோவிலிலிருந்து எந்தவித அதிகாரமும் இல்லாது பயிர் செய்து அனுபவித்து வருகிறார்கள். எந்தவித குத்தகையும் கொடுப்பதில்லை. இதில் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இரட்டை திருமாளிகை திருப்பணி பற்றி கேள்வி இருக்கிறது. அதற்கான விவரங்கள் தான் என்னிடம் இருக்கின்றன. தனிக் கேள்வி போட்டால் தக்க தகவல்களைத் திரட்டித் தரலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் பதிலிலே இருந்து இந்த இரட்டை திருமாளிகையின் முன் செடி, கொடிகள் வளர்ந்திருப்பது உண்மைதான் என்பது தெரியவருகிறது. அவற்றை அப்புறப்படுத்தி பரிகாரம் காண்பதற்கு திருப்பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தினசரி பக்தர்கள் கோவிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வருகிறார்கள். ஆகவே, இதை மேலும் காலம் கடத்தாமல் விரைவில், அசெம்பிளி கூட்டம் முடிவதற்கு முன்னாலே, செடி, கொடிகளை அப்புறப்படுத்த உத்தரவு போட்டு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரட்டைத் திருமாளிகை என்னும் கட்டிடம் பெரிய காஞ்சீபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் ஆலயத்தின் ஒரு பகுதி. 1900 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4 ஆம் தேதி நடந்த ஆலய கும்பாபிஷேகத்திற்கு முன்னாலே ஆலயத்தின் அமைப்பு, தற்போதைய அமைப்பிலிருந்து மாறுபட்டு இருக்கிறது. அதற்குப்பிறகு, இரட்டை திருமாளிகை உபயோகத்தில் இல்லாது இருந்து வருகிற காரணத்தால் முள் புதர்கள் வளரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அவை ஆண்டுக்கொரு முறை அப்புறப்படுத்தப்பட்டு சுத்தப்படுத்தப்படுகிறது. மேலும், தினசரி பக்தர்கள் இதை பயன்படுத்துவதில்லை. ஆலயத்தின் அருகே இருப்பதால் சீர்திருத்தி, நல்ல முறையில் வைக்கவேண்டுமென்று திருப்பணிக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.